உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்
நாள் :03.12.2024
அ.சா.5– சதீஸ்குமார் S/o.குருசாமி
S.C. No.583/2023 :

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் BE (EEE) படிப்பு படித்துள்ளேன். இந்த வழக்கில் அ.சா.1 நதியா என்னுடைய அண்ணன் மனைவி என்றால் சரிதான். என்னுடைய வீட்டு முகவரி 3/64A அண்ணாநகர், கோட்டநத்தம்பட்டி போஸ்ட், மேலூர் தாலுகா, மதுரை மாவட்டம். அ.சா.1 நதியாவும் மேற்படி முகவரியில் தான் எங்களுடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த 20.12.2021 அன்று மேற்படி முகவரியில் இல்லை என்றால் காலை 8 மணி வரை அங்கு இருந்தார், அதன்பிறகு பூதமங்கலத்திற்கு சென்றுவிட்டார். எதற்காக பூதமங்கலத்திற்கு சென்றார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் வேலைக்கு சென்றுவிட்டேன்.என் அம்மா கோட்டநத்தம்பட்டியில் தான் இருந்தார். என் அண்ணனுக்கும், அண்ணிக்கும் ஒரு மகள் இருக்கிறார். அவர் தற்போது 6ம் வகுப்பு மேலூரில் படித்து வருகிறார். என் அண்ணி தான் அண்ணன் மகளை பராமரித்து காலை பள்ளிக்கு அனுப்புவார் என்றால் சரிதான். என் அண்ணன் மகள் காலை வேனில் பள்ளிக்கு வருவார். காலை சுமார் 7.30 மணியில் இருந்து 8.00 மணியளவில் பள்ளி வேன் வரும். நான் 8.00 மணி வரை அண்ணி வீட்டில் இருப்பதை பார்த்தேன், அதன்பிறகு நான் வேலைக்கு சென்றுவிட்டேன். அதன்பிறகு என் அண்ணி அவசர அவசரமாக என் அண்ணன் மகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு கிளம்பினாரா என்றால் இருக்கலாம். நான் சுமார் 9.30 மணியளவில் வீட்டிற்கு வந்துவிட்டேன். என்னை கீழவளவு காவல்நிலையத்தார், மேலூர் அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள்.

முதல் விசாரணையில் கூறிய விபரத்தை தான் நான் காவல்துறை விசாரணையிலும் தெரிவித்தேன். என்னை காவல்நிலையத்தார் அரை மணிநேரத்திற்குள்ளாக விசாரணை செய்தார்கள். வழக்கில் நடந்த விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். சம்பவம் நடந்த போது, கோட்டநத்தம்பட்டியில் இருந்தேன். அதன்பிறகு கிளம்பி பூதமங்கலம் சென்றேன். என் அண்ணியை பூதமங்கலத்தில் நான் சென்று சம்பவம் நடந்த போது பார்த்தேன். சம்பவம் நடந்த பிறகு மேலூர் அரசு மருத்துவமனையில் நதியாவை அழைத்து சென்ற போது அங்கு வைத்து என்னை விசாரணை செய்தார்கள் நேரம் நினைவில்லை, பதற்றமாக இருந்தது. என் அம்மாவும், நதியா அம்மாவும் ஆம்புலன்சில் நதியாவுடன் சென்றார்கள், நான் பின்பு காரில் சென்றேன். நான்சென்று பார்க்கும் போது அ.சா.1 நதியா வலியில் கதறி கொண்டிருந்தார். நான் சென்ற பிறகு தான் காவல்துறையினர் அங்கு வந்தார்கள். காவலர்கள் விசாரிக்கும்போது அ.சா.1 நதியா அவரிடம் நடந்தவற்றை கூறினார். நடந்த விபரத்தை காவலர்களிடம் நதியா எங்கு நடந்தது, எப்படி நடந்தது, எந்த இடத்தில் நடந்தது என்று தெளிவாக குறிப்பிட்டாரா என்றால் சொன்னார். மேற்படி விபரத்தை போலிஸ் எழுத நதியா கையெழுத்து செய்தார். ஆஜர் எதிரிகளுக்கும், என் அண்ணிக்கும் இடையே சொத்து தொடர்பான பிரச்சினை இருக்கும் விபரம் தெரியுமா என்றால் தெரியும். நதியாவிற்கு மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது ஆனால் அவர் வலியால் துடித்ததால் மதுரை கென்னட் மருத்துவமனைக்கு அன்றே அழைத்து சென்றுவிட்டோம்.மேலூர்அரசு மருத்துவமனையில் அரை மணி நேரம் அளவு அங்கேயே இருந்தோம். அதன்பிறகு மதுரைக்கு சென்றுவிட்டோம். மேலூர், அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் போது அங்கேயே காவல்நிலையத்தார் விசாரணை செய்து சென்றுவிட்டார்களா என்றால் ஆமாம்.

அதன்பின்பு என்னையோ, நதியாவையோ காவலர்கள் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2024.12.03 19:07:49 +0530

Assistant Sessions Judge
Melur